ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# இயல் சாற்று

## (வடகலை ஸம்ப்ரதாயம்)

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# இயல் சாற்று

## (வடகலை ஸம்ப்ரதாயம்)

பொய்கை முனி பூதத்தார் பேயாழ்வார் ⋆ தண்
பொருநல் வரும் குருகேசன் விட்டுசித்தன் ⋆
துய்ய குலசேகரன் நம் பாணநாதன் ⋆
தொண்டரடிப்பொடி மழிசை வந்த சோதி ⋆
வையம் எல்லாம் மறை விளங்க வாள் வேல் ஏந்தும் ⋆
மங்கையர் கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடும் ⋆
செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித் ⋆
தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே ॥ **1** ॥

இன்பத்தில் இறைஞ்சுதலில் இசையும் பேற்றில் ⋆
இகழாத பல் உறவில் இராகம் மாற்றில் ⋆
தன் பற்றில் வினை விலக்கில் தகவோக்கத்தில் ⋆
தத்துவத்தை உணர்த்துதலில் தன்மை ஆக்கில் ⋆
அன்பர்க்கே அவதரிக்கும் ஆயன் நிற்க ⋆
அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு ⋆
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும் ⋆
தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே ॥ **2** ॥

என் உயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கு ⋆
யான் அடைவே அவர் குருக்கள் நிரை வணங்கி ⋆
பின் அருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல் ⋆
பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி ⋆

நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார் ⋆
நாதமுனி சடகோபன் சேனை நாதன் ⋆
இன் அமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு ⋆
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே ॥ **3** ॥

ஆரணநூல் வழிச் செவ்வை ⋆ அழித்திடும் ஐதுகர்க்கு ⋆ ஓர்
வாரணமாய் ⋆ அவர் வாதக் கதலிகள் மாய்த்த பிரான் ⋆
ஏரணி கீர்த்தி ⋆ இராமானுசமுனி இன் உரைசேர் ⋆
சீரணி சிந்தையினோம் ⋆ சிந்தியோம் இனித் தீவினையே ॥ **4** ॥

நீள வந்தின்று விதி வகையால் ⋆ நினைவொன்றிய நாம் ⋆
மீள வந்தின்னும் வினை உடம் பொன்றி ⋆ விழுந்துழலாது ⋆
ஆளவந்தார் எனவென்று ⋆ அருள் தந்து விளங்கிய சீர் ⋆
ஆளவந்தார் அடியோம் ⋆ படியோம் இனி அல்வழக்கே ॥ **5** ॥

காளம் வலம்புரி அன்ன ⋆ நற்காதல் அடியவர்க்குத் ⋆
தாளம் வழங்கித் ⋆ தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல் ⋆
மூளும் தவநெறி மூட்டிய ⋆ நாதமுனி கழலே ⋆
நாளும் தொழுதெழுவோம் ⋆ நமக்கார் நிகர் நானிலத்தே ॥ **6** ॥

ஆளும் அடைக்கலம் என்றெம்மை ⋆ அம்புயத்தாள் கணவன் ⋆
தாளிணை சேர்ந்து ⋆ எமக்கும் அவை தந்த தகவுடையார் ⋆
மூளும் இருட்கள் விள்ள ⋆ முயன்றோதிய மூன்றின் உள்ளம் ⋆
நாளும் உகக்க இங்கே ⋆ நமக்கோர் விதி வாய்க்கின்றதே ॥ **7** ॥

திருவுடன் வந்த செழுமணி போல் ⋆ திருமால் இதயம் ⋆
மருவிடம் என்ன மலரடி சூடும் ⋆ வகை பெறுநாம் ⋆
கருவுடன் வந்த கடு வினை ஆற்றில் ⋆ விழுந்தொழுகாது ⋆
அருவுடன் ஐந்தறிவார் ⋆ அருள் செய்ய அமைந்தனரே ॥ **8** ॥

விண்ணவர் வேண்டி ⋆ விலக்கின்றி மேவும் அடிமை எல்லாம் ⋆
மண் உலகத்தில் ⋆ மகிழ்ந்தடைகின்றனர் ⋆ வண் துவரைக்
கண்ணன் அடைக்கலம் கொள்ளக் ⋆ கடன்கள் கழற்றிய ⋆ நம்
பண் அமரும் ⋆ தமிழ் வேதம் அறிந்த பகவர்களே ‖ **9** ‖

இயல் சாற்று முற்றிற்று

sunder kidāmbi prapatti dot com sunder kidāmbi